மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 136/2021**

2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ஆம் தேதி திங்கட்கிழமை

வா.சா.1 ஞானசேகரன்

கு.வி: (2 முதல் 4ம் பிரதிவாதிகள் தரப்பில்)

தாவா வழக்கை 4 ஏக்கர் 84 செண்டிற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 4 ஏக்கர் 84 செண்டு என்பதில் 108/3 புலஎண்ணிற்கு 1 ஏக்கர் 42 செண்டை சேர்த்து உள்ளடக்கி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா வழக்குடன் சேர்த்து வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வில்லங்க சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் சர்வே எண் 108/1ன் ஒருபகுதி மட்டும் தான் கட்டுப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் படி 1 ஏக்கர் 31 செண்டு என்றால் சரிதான். சர்வே எண் 108/1 யை தாவா சொத்துவிபரத்தில் காட்டவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிராதில் தாவா சொத்து விபரத்தில் பட்டா எண் 425 என்று தான் காணப்பட்டுள்ளது என்றால் சரிதான், தவறாக உள்ளது. சர்வே எண் 108/2 சொத்தின் மொத்த விஸ்தீரணம் 5 ஏக்கர் 96 செண்டு என்றால் சரிதான். 5 ஏக்கர் 96 செண்டு என்று குறிப்பிட்டுத்தான் நான் தாக்கல் செய்திருக்கும் அனைத்து ஆவணங்களிலும் உள்ளது என்றால் சரிதான். 108/2 சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் 7 ஏக்கருக்கு மேல் என்றால் சரியல்ல. சர்வே எண் 108/2ற்கு உண்மையான விஸ்தீரணம் என்ன என்பதை கிராமகணக்கிலோ, அடங்கலிலோ நான் எடுத்து பார்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து விபரத்தில் சொல்லியுள்ளவாறு மாங்குடி கிராமத்தில் புல எண் 108/3 என்ற சர்வேஎண்ணே கிடையாது என்றும் கிராம கணக்கில் 108/1 மற்றும் 108/2 தான் உள்ளது என்றால் பத்திரத்தில் கண்டுள்ளது, வருவாய் ஆவணங்களில் இல்லை. தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர் இந்த நீதிமன்றத்தில் 19.01.2013ல் முதல்முறையாக வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கை முறையாக கோப்பிற்கு எடுப்பதற்கான நடவடிக்கைகளை செய்யாமல் உயர்நீதிமன்றத்தில் வா.சா.ஆ.9 ன்படி உத்திரவு பெறப்பட்டு அந்த

உத்திரவின்படி தான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி உத்திரவில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்க தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உத்திரவில் சொல்லப்பட்ட பிராதை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த முதல் பிராதில் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தை இல்லா நிலையது என விளம்புகை செய்ய மட்டுமே பரிகாரம் கோரியிருந்தேன் என்றால் சரிதான். உயர்நீதிமன்ற உத்திரவின்படி சட்டப்படி வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்று தான் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 12.07.2010 தேதியில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் போலி ஆவணம் என்பது எந்த தேதியில் எங்களுக்கு தெரியவந்தது என்றால் 2010ல் தெரியவந்தது. தேதி தெரியுமா என்றால் பத்திரம் பதிந்து ஒரு மாதத்திற்குள் தெரியவந்தது. பத்திரம் பதிந்ததற்கு பிறகு 29.07.2010ல் ஆவண எண் 5041/2010 ஆவணம் எனது பெயருக்கு கிரையப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், விடுபட்டு போன 15 செண்டை எனது பெயரில் கிரைய பதிவு செய்தேன். அந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. (மேற்படி ஆவணம் வாதி தரப்பில் வா.சா.ஆ.4ல் சேர்ந்து தைக்கப்பட்டுள்ளது) மேற்படி ஆவணத்தில் விடுபட்டுபோன 15 செண்டிற்காக எனது பெயரை மட்டும் சேர்த்து மற்ற வாதிகளை தவிர்த்து பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 15 செண்டை சேர்த்ததால் தான் தாவா சொத்து 4 ஏக்கர் 84 செண்டு ஆகும் என்றால் சரிதான். அதற்கு முன்னர் 4 ஏக்கர் 69 செண்டு தான் இருந்தது என்றால் சரிதான். எனது பிராதிலோ, சாட்சியத்திலோ பி.வா.சா.ஆ.1 எனது பெயரில் 15 செண்டு வாங்கப்பட்டதற்கான விபரங்கள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரில் வா.சா.ஆ.7 பதிவு செய்த 20 நாட்களுக்கு பின்னர் தான் பி.வா.சா.ஆ.1 பதிவு செய்ய்பபட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணமான பட்டா மாறுதல் உத்திரவின்படி 5041/2010 என்ற ஆவணத்தை மட்டும் குறித்து தான் எங்களது பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ன் படி 15 செண்டு மட்டும் கிரையம் பெற்ற சொத்திற்கு பதிலாக 4 ஏக்கர் 84 செண்டிற்கு புதிய பட்டா வாதிகள் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது சட்டப்படி

செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் வா.சா.ஆ.4 பதிவு செய்யப்பட்ட கிரைய பததிரத்தின் எண்ணும் அதுபற்றிய குறிப்போ காணப்படவில்லை என்றால் சரிதான். பட்டா எண் 858 யை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். பட்டா எண் 426 2 முதல் 4 பிரதிவாதிகளின் மூதாதையர் பெயரில் இருந்த காரணத்தினால் புலஎண் 108/2ஏ ன் மொத்த விஸ்தீரணத்தை ஒத்துசெய்யவேண்டும் என்ற காரணத்திற்காக பி.வா.சா.ஆ,1 யை வா.சா.ஆ.7 பதிவு செய்யப்பட்ட பின்னர் போலியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணம் போலியானது என்ற காரணத்தினால் தான் எனது பிராதிலோ, சாட்சியத்திலோ, காவல் நிலைய்த்ததில் கொடுத்த புகார் மனுவிலோ அதுபற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்காக உயர்நீதிமன்றத்தில் கிரிமினல் ஒ.பி(எம்.டி) 4516/2011 வழக்க தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி கிரிமினல் ஒ.பி(எம்.டி) 4516/2011 வழக்கின் தட்டச்சு செய்யப்பட்ட டைப்செட் (Served Copy ) பி.வா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. நான் தாக்கல் செய்த கிரைய பத்திரங்கள், பட்டா, புகார் மனு ஆகியவை அதில் காணப்பட்டுள்ளன என்றால் சரிதான். மேற்படி டைப்செட் 01.04.2011ல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2010ல் எனது பெயரில் பதிவு செய்த பி.வா.சா.ஆ.1 பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல்துறையில் கொடுக்கப்பட்ட புகார்மனுவிலும் பி.வா.சா.ஆ.1 பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 108/3 என்ற இல்லாத சர்வே நம்பரில் பெறப்பட்டதாக சொல்லப்படும் 1 ஏக்கர் 42 செண்டு ஸ்தலத்தில் இல்லாத இடம் ஆகும் என்றால் சரியல்ல. 108/3 சர்வே எண் இருந்ததாக காண்பிக்கும் வருவாய் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 108/3 ல் காணப்படும் சொத்து 108/2ஏ ஆகவோ 108/2பி ஆகவோ மாறுதவற்க எந்த ஒரு சட்ட வழிமுறையும் கிடையாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4ன் படி தான் வாதிகள் அனைவருக்கும் உரிமை மூலம் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4ன் படி எந்த ஒரு உரிமையும் வாதிகளுக்கு தாவா சொத்தில் மீது இல்லை என்றால் சரியல்ல. தாவா

சொத்தில் தற்பொழுது வரை 1ம் பிரதிவாதி தான் சுவாதீனத்தில் இருந்து எலுமிச்சை, தென்னை கன்றுகள் வைத்துள்ளார் என்றால் சரியல்ல, கருவேலமரங்கள் தான் உள்ளது. நாளது தேதிவரை தாவா சொத்தின் சுவாதீனத்தில் வாதிகள் இருந்துவருவதை காண்பிக்கும் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் தற்பொழுத வரை நாங்கள் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறோம். 1976ல் வா.சா.அ.3 ஆவணத்தை எழுதிக்கொடுப்பதற்கு வேலம்மாள் வகையறாவிற்கு எந்த ஒரு அடிப்படை உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. முத்தையா கோனாரின் சட்டப்படியான வாரிசுகள் தான் வேலம்மாள் மற்றும் அவரின் குழந்தைகள் என்பதை மெய்ப்பிக்கும் ஆவணங்கள் எதைவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்களிலும் புல எண் 108/3 என்ற இல்லாத புல எண்ணை சொல்லி கிரையம் செய்ததால் மேற்படி 4 ஆவணங்களும் செல்லத்தக்க ஆவணங்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளுக்கு தான் பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரம் வா.சா.ஆ.7 பதிவின் அடிப்படையில் தான் மேற்படி பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2010ம்ஆண்டு 7ம் மாதம் தெரிந்த விசயத்திற்கு 3 வருட காலதாமதத்திற்கு பிறகு 9வது வருடத்தில் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், எனது உடல்நிலை குறைவினால் நான் உரிய நேரத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை. நான் கொடுத்த புகார் பொய்யான புகார் என்பதால் தான் காவல் நிலையத்தில் வைத்து முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி புகாரின் நிலை எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.6 கிஸ்துரசீதில் வி.ஏ.ஓ முத்திரை மற்றும் அரசு முத்திரை இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து 108/2ஏ வில் உள்ள சொத்து பிரதிவாதி 2 முதல் 4 உள்ளவர்களின் மூதாதையர் சொத்து என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பதிவு செய்து கொடுத்த வா.சா.ஆ.7 சட்டப்படியான ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வருவாய் ஆவணங்கள் மற்றும் கணக்குகளில் அனைத்திலும் புல எண் 108/2ஏ 2ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் தான் காணப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வருவாய்ஆவணங்கள் அனைத்திலும் நான் சொல்வது போல் சர்வே எண் 108/3 என்ற சர்வே எண் காணப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 கிரையம்பெறுவதற்க முன்பும் அதற்கு பின்னரும்

பட்டா எண் 426 படி பிரதிவாதிகள் 2 முதல் 4 ஆனவர்களின் மூதாதையர் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். பட்டா மாறுதல் உத்திரவு அனைத்து வருவாய் ஆவணங்களையும் பதிவு ஆவணங்களையும் பரிசீலனை செய்யாமலும் பிரதிவாதிகளுக்கு முறையான அறிவிப்பும் கொடுக்காமல் கொடுக்கப்பட்ட வா.சா.ஆ.5 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 24.08.2010 தேதிக்கு முன்னர் பதிவு செய்ப்பபட்ட ஆவணம் மூலமாக மோகன்ராஜ் பெயரில் சொத்து கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல, அதற்கு முன்னர் பட்டா வேண்டி மனுக்கொடுத்திருந்தோம். மேற்படி மனு எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 5ம் மாதம் 2010ம் வருடம், தேதி ஞாபகம் இல்லை. மே்றபடி மனு கொடுக்கப்பட்ட பொழுது 15 செண்டு வாங்கியதற்கான ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். 5ம் மாதம் கொடுத்த மனுவின் பேரில்தான் பட்டா மாறுதல் உத்திரவு பெறப்பட்டது என்றால் சரிதான். மனுகொடுக்கும்பொழுது வருவாய்துறை அலுவலர்கள் எங்களது ஆவணத்திற்கும் வருவாய் ஆவணத்திற்கும் வேறுபாடு உள்ளதாக கூறி 15 செண்டிற்கான ஆவணத்தை கேட்டபிறகு தான் பி.வா.சா.ஆ.1 யை பதிந்தோம் என்றால் சரிதான். விஸ்தீரணத்தை சீர்செய்யவேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் பி.வா.சா.ஆ.1 போலியாக உற்பத்தி செய்ப்பபட்டது என்றால் சரியல்ல. சொத்தின் சுவாதீனத்தில் இல்லாத வாதிகள் விளம்புகை பரிகாரம் மட்டும் கேட்பதற்கு சட்டப்படி உரிமையில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்களின் அசல் ஆவணங்களை நேரில் பார்த்ததில்லை என்றால் என்னிடம் தான் அசல் ஆவணங்கள் உள்ளது. மேற்படி அசல் ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் உண்மையாக இருக்கும்பட்சத்தில் வா.சா.ஆ.1 முதல் 3 ஆவங்களின் அசல் என்னிடம் இருந்திருக்கும் என்றம் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.8 முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தபின்னர் போலீசார் என்னை எந்தக்காலத்திலும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 – 15 செண்டு ஆவணம் சம்மந்தமாக போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை 1993 முதல் இன்று வரை எந்த காலகட்டத்திலும் நில அளவையரை வைத்து அளந்துபார்க்கவில்லை என்றால் சரிதான், முள்ளுகாடாக உள்ளதால் நாங்கள் பராமரித்துவருகிறோம். தாவா சொத்தின்

சுவாதீனத்தில் நாங்கள் உள்ளதை நிரூபிக்கும் வருவாய் ஆவணங்களான பட்டாவும், கிஸ்து ரசீதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவிலலை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். எனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டதாக சொல்லப்படும் உத்திரவிற்கு முன்னர் மாங்குடி கிராம நிர்ாவக அலுவலரிடம் தாசில்தார் ஒரு அறிக்கை கோரியிருந்தார் என்றால் அப்படி ஒரு அறிக்கை கோரப்படவில்லை. அறிக்கை கோரப்பட்ட பின்னர் தான் பட்டா மாறுதல் உத்திரவு சட்டப்படி கொடுக்கப்படும் என்றால் சரியல்ல. சர்வே எண் 108/2ஏ ல் கட்டுப்பட்ட சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா எண் 994 என வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஸ்தலத்தில் இல்லாத சர்வே எண்ணை வைத்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்து என்றால் சரியல்ல. புல எண் 108/3 ஸ்தலத்தில் இல்லாத காரணத்தினாலும் வருவாய் ஆவணங்களிலும் இல்லாததால் தான் மேற்படி வருவாய் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புல எண் 108 என்பது உட்பிரிவாகி 108/1, 108/2ஏ, 108/2பி உட்பிரிவாகியுள்ளது என்றால் சரியல்ல. உயர்நீதிமன்றம் வழக்கு சட்டப்படி தாக்கல் செய்யதான் அறிவுறுத்தப்பட்டது என்றும் காலநிர்ணயித்தை நீட்டித்து எந்த உத்திரவும் வழங்கவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. பி.வா.சா.ஆ,1 பதிவு செய்யப்படும் அன்றை தேதியில் அதன் மதிப்பு எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. உண்மையில் கிரைய தொகை கொடுத்து கிரையம் வாங்கியிருந்தால் அதன் உண்மைத்தொகை தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல, எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை. வழக்கு தாக்கல் செய்த 2019 தேதியில் தோராயமாக 1 செண்டின் மதிப்பு ரூ.5000/- இருக்கும் என்றால் சரியல்ல, செண்டு ரூ.1000/- இருக்கும். தாவா சொத்தின் மதிப்பு ரூ.4,80,000/- என்பதை மறைத்து வழக்கு தாக்கல் செய்து நீதிமன்ற கட்டணத்தை குறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்திருப்பதால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எந்த ஒரு வழக்குமூலம் இல்லாமலும் சரியான ஆவணங்களும் தாக்கல் செய்யாததால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. சொத்தின் சுவாதீனத்தில் இல்லாததாலும்

சுவாதீன பரிகாரம் கோராமல் விளம்புகை பரிகாரம் மட்டும் கோரியுள்ளதால் தாவா வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை